# முகத்திரை



செல்வி பிரியாவின் கவிதைத் தொகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகத்திரை

பிரியா அருட்பிரகாஸ் அவர்களின்
கவிதைத் தொகுப்பு

வெளியீடு

**பலாலி ஆசிரியர் கலாசாலை**
**மாணவர் மன்ற ஒன்றியம் - 2011**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுதியவரிடமிருந்து.........



அன்பான நெஞ்சங்களே என்னுடைய பேனா முனைகள் யுத்தம் புரிகின்றன இவ் வெள்ளைத்தாள்களில் இவை வெறும் எழுத்துக்களல்ல, என்னுடைய சிந்தனைத்தூறல்கள் (மனக்குமுறல்கள்) மேலும் இவைகள் கவிதைகளா? என்று தெரியாதவளாய் நானும் எழுதுகின்றேன். ஏனெனில் கவிதை எழுதுவதில் நானோ கைதேர்ந்தவள் அல்ல சிறுபிள்ளை தனமாய் கிறுக்கியவைகள் இவை ஆகவே இவற்றை வாசித்து, அதில் ஏதேனும் தவறுகள் இருப்பின் மன்னித்து என் இவ் கன்னி முயற்சியினை பாராட்டி நல்லாசிகள் கூறுவீர்கள் என்ற நம்பிக்கையோடும், என்னுடைய இக் கவிதை பயணத்தின் பாதையை மேலும் ஊக்கப்படுத்துவீர்கள் என்று உங்கள் சொல்லடிகளுக்கான காத்திருக்கும் இவள்

உங்கள்
பிரியா
பலாலி ஆசிரியர் கலாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் ஆசிச் செய்தி



எங்கள் அன்புக்கும், மதிப்புக்கும், பண்புக்கும் என்றும் உரித்தான மாணவச் செல்வங்களில் ஒருவரான ஆசிரிய மாணவி செல்வி அருட்பிரகாஷ் சகாயம் பிரியா அவர்களின் கன்னிப்படைபான முகத்திரை என்னும் கவிதை நூல் வெளிவருவதனைஇட்டு பெரு மகிழ்சியும் பெருமையும் கொள்கின்றேன். இதற்காக அவருக்கும், அவரது முயற்சிகளுக்கும் ஆசியையும் வாழ்த்துக்களையும் மனமுவந்து தெரிவித்துக் கொள்கின்றேன்.

நேர்மை, உண்மை, தாழ்ச்சி கடமையுணர்வு மற்றவர் நல்லாக இருக்கவேண்டம் என்ற மனப்பாங்கு இவைகளை தன்னகத்தே கொண்ட பிரியா அருட்பிரகாஷ் இன் இக் கவிதைகள் உயிர் உள்ளவை ஒவ்வொருவரையும் சிந்திக்கச் செய்யபவை. உள்ளங்களை ஊடுருவிப் பாய்ந்து ஒவ்வொருவராகவும் என்றும் நல்லவாழ்விற்காக மனிதநேயம் கொண்டவர்களாக வாழவேண்டும் என்பதனை தன் கவிதைகள் மூலம் வெளிக்காட்டி, வேண்டி நிற்கின்றார் பிரியா.

பிரியா அருட்பிரகாஷ் சகாயத்தின் இக் கன்னி முயற்சிகள் மேலும் விரிந்து சமுதாயத்தின் நீதி, நேர்வை, உண்மை என்றும் வழிகாட்டிச் செல்லவேண்டும் என்று விரும்பி மீண்டும் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரிவுரையாளரின் வாழ்த்துச் செய்தி

ஆசிரிய மாணவி செல்வி.அருள்பிரகாஸ் சகாயம். பிரியா அவரக்ளின் கவிதைத் தொகுப்பிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நிறைவடைகின்றேன்.பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தனது கவிதைத் தொகுப்பு வெளியீட்டினை ஆரம்ப முயற்சியாக முன்னெடுப்பது ஆசிரிய மாணவியின் தமிழ் மொழியும் இலக்கியமும் இணைந்த பற்றுறுதியை எடுத்தியம்புகின்றது. ஆசிரிய மாணவி செல்வி பிரியா அவர்கள் கற்பனைத் திறன் சொல்லாட்சி, துணிவு, ஊக்கம், பரந்துபட்ட சிந்தனையாற்றல் உள்ள படைப்பாளியாகக் காணப்படுகின்றார். இவரது ஆசிரியப்பணிக்குரிய சிறந்த முன்மாதிரியான இம் முயற்சிக்கு இறை ஆசியையும் பாராட்டுக்களையும் கூறிக்கொள்கின்றேன். ஒவ்வொரு ஆசிரியரும் தமக்கிடையே காணப்படுகின்ற சுயதிறன் ஆளுமைக் கூறுகளை சிறப்பான முன்வைப்பதன் மூலம் மாணவர் சமூகத்தினை ஊக்கப்படுத்துவதுடன் ஆசிரியர் மாணவர் சமூகத்தினை ஊக்கப்படுத்துவதுடன் ஆசிரியர் மாணவர் இணைப்பினை வலுவடையச் செய்ய முடிகின்றது. இவ்வகையில் ஆசிரிய மாணவி அவர்கள் தனது உள்ளத்தில் உதித்த சிந்தனைகளை கவிதை வரிகளாக இங்கு தொகுத்துத்தந்துள்ளார். இது இவரின் உளமேம்பாட்டிற்கு ஆரோக்கியமாக அமையும் என நம்புகின்றேன். இவரது இவ் ஆரம்ப முயற்சி எதிர்காலத்தில் மேலும் பல ஆக்கங்களை உருவாக்கும் என எதிர்பார்ப்பதுடன் தனது பாடசாலைக் காலத்தில் ஆசிரிய பணி செய்யும் போது கல்வித்திணைக்கத்தின் மூலம் மேலும் பல படைப்புக்களை வழங்கி மணாவ சமூகத்திற்குச் சிறந்த முன்மாதிரியான வழிகாட்டியாகச் சேவை செய்ய எனது நல்வாழ்த்துக்களைக் கூறி நிறைவு செய்கின்றேன்.

திரு.க.ஹரிஹரசக்தி
விரிவுரையாளர்
பலாலி ஆசிரியர் கலாசாலை
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
*2011.12.21*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை

வாழ்க்கை .....!
பிறப்பில் ஆரம்பித்து
இறப்பில் முடிகிறது
என்பதல்ல வாழ்க்கை
வாழும் ஒவ்வொரு நிமிடமும்
வரும் பிரச்சினைகளையும்
போராட்டங்களையும் சந்தோசங்களையும்
சகித்துக் கொண்டு வாழ்வதே
இம் மனித வாழ்க்கை .....!

மனித வாழ்க்கையில்
மனிதர்கள் வாழும்
நாட்கள் எத்தனை
என்று கணக்கிட்டுப் பார்க்க
கடவுள் நமக்கு காலக்கெடு
கொடுக்கவில்லை!
இன்று இருப்போம்
நாளை இறப்போம்
இதுதான் இம்மனித வாழக்கை...!

மாயையான இவ்வுலக
மனித வாழ்க்கையில்
மனித முயற்சிகள்
எத்தனை எத்தனை
என்றுப் பார்த்தால்
ஏதுமில்லை மீதமாக
பிறப்பதும் தனிமையில்
இறப்பதும் தனிமையில்
என்பது மாத்திரம் உண்மை
இதுதான் இம்மனித வாழ்க்கை.....!
மனிதர்கள் பார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடாய் உழைத்து
மாளிகைகளை கட்டினாலும்
இறுதியில் சொந்தமென்று
அவனுக்குச் சொல்ல ஒன்றுமில்லை.......
இதுதான் இம்மனித வாழ்க்கை.......!

இன்று என்ன செய்தோம்
என்பதை விட
இந்த செக்கனில்
எதை செய்து முடித்தோம்
என்பதை பற்றி யோசி
ஏன் என்றால்
இப்போது கடந்த செக்கன்
இனி வருவதில்லை
உன் வாழ்க்கையில்...........!

துன்பங்களை
துயரமாக எண்ணாதே
இன்பங்களை இன்று
நாளையென்று தொடராதே
எதிலும் அளவாயிரு
உனக்கு நல்லது

மனித வாழ்க்கையில்
மறைந்திடும் ஒவ்வொரு செக்கனும்
மனிதனை மரணத்திடம்
கிட்டி சேர்க்கின்றது.
இருக்கும் காலத்தில் இன்பமாய்
வாழப்பழகிக் கொள் – அப்போது தான்
மரண நொடியில் உன் மனம்
மகிழச்சியாய் போகும் இவ்வுலகில்
அனைத்தையும் அனுபவித்தோமென்று........!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

கல்விக்காக
காலச்சுவடுகளில்
கால் பதித்திருக்கின்றோம்
கடினமாய் இருக்கும்
காலத்தை நினைத்தால்
கவலைப்படாதே
காலம் கண்ணிமைக்கும் நேரத்தில்
கடந்துவிடும் – இதில்
காதல் வரும்
கர்வம் தோன்றும்
காரணம் தெரியாது – ஆனால்
கவனமாய் இரு
கண்விழித்து
கட்டாயம் கிடைக்கும்
கரகோசத்துடன்
நல்ல பெறு பேறு......!

## யார் கடவுள்.......?



யார் கடவுள்
என்ற கேள்விகளுக்கு பதில்
படைத்தவனே!
படைத்தவன் யார்
என்று தெரியாமல்
பல மதங்கள் பாரினில்
உருப்பெற்றுக் கொண்டிருக்கின்றன
இந்நிலை கண்டு புலம்பி
கொண்டிருக்கின்றது மனித இனம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏய்.....!
நீயோ படித்தவன் தானே
பாரினில் நடப்பவைகளை
சில நிமிடம் சிந்தித்துப்பார்
எது உண்மை
எது பொய்யென்று தெரியும்........!

உனக்கொரு கடவுள்
எனக்கொரு கடவுள் என்றால்
மதங்களின் எண்ணிக்கையே
இவ்வுலகத்தின் எண்ணிகையாகுமடா!
உலகம் மட்டும் ஒன்று – ஆனால்
கடவுளும் மதங்களும் ஆயிரமாயிரம்
எது உண்மை.........?

என்று யோசித்தால்
உலகமும் ஒன்று
படைத்த கடவுளும் ஒன்று
என்பதே உண்மை – அந்த
படைத்த கடவுள் யார் என்பதை
உன் வாழ்க்கையில் நீ தேடு – அப்போது
உனக்கு தெரியும்.......!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ அடிமைகள்

நாங்கள் சாதாரணமானவர்கள் அல்ல
நூற்றி எண்பது வருட
வரலாறு கொண்ட
கௌரவ அடிமைகள்

எங்கள் மூதாதையர் தேடலுக்காக
தென்னிந்தியாவிலிருந்து இங்கு
இறங்கினர் "கள்ளத் தோணிகள்" என்ற
கௌரவ பெயரில்
அன்று தொட்டு இன்று வரை
நாங்கள் அடிமைகள்
ஆம்! கௌரவ அடிமைகள்

எங்களுக்கு இது காறும்
பிரஜா உரிமைகள் இல்லை
உரிய உரிமைகள் ஆவணங்கள்
உரிய நோக்கோடு தரப்படவில்லை
கல்வி முறையாக இல்லை
ஆம்! நாங்கள் கௌரவ அடிமைகள்

நிரந்தர வீடுகள் இல்லை
பத்தடி இன்னும் மாறவில்லை
நீட்டி விட்டால் ஆறடி
உரிமையாக இன்று வரை இல்லை
பெரியகங்காணி முறை மாறி
பேரினவாத அடக்குமுறை என்று
ஆழப்படுகின்றோம்
ஆம்! நாங்கள் கௌரவ அடிமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் சட்டைகள்
இன்னும் வெளுக்கவில்லை – கூடவே
சாக்கு படுக்கைகளும்
காற்றோட்டமான போர்வைகளும்
கூடை சுமந்தே
கூன் விழுந்த முதுகும்
நிமிரவில்லை
இவையாவும் இன்னும்
மாறவில்லை!
ஆம்! கௌரவ அடிமைகள் நாங்கள்......!

## தோல்வியின் முகவரி

என்னை நானே சிந்திக்கின்றேன்
ஆம்! தோல்வியின் முகவரியே
நான் தான் எனக்கு அந்த
முகவரியை தந்தவளும்!
நீ தான் நீயே தான்.....!



நான் யாரும் அறியப்பாடாத தீவாக
இருந்த போது நீ தானே
நட்பின் முழு உருவாய் வந்தாய்
வந்தது மட்டுமல்ல
உன்னுடைய நட்பு கொடியை
கழற்ற முடியாமல் பதித்து விட்டாய்

காற்றுக்கு இல்லை எல்லை
நட்புக்கு ஏன் இல்லை
சகாராவில் கூட தண்ணீர் முயற்சிகள்
தாரளதாய் நடக்கின்றது
என் நட்பில் மட்டும்
இரும்பு கதவுக்கு இன்னுமொரு பூட்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகத்துணிந்தவளடி நான்
இன்று மரணத்திடம் ஒரு கனம்
மண்டியிட வைத்து விட்டாயே
ஒரு கணப்பொழுதாகிலும்
உன்னோடு நட்பில் கலந்து
மகிழ்ந்த பின் வருகின்றேன் – என்று
கெஞ்சிக் கேட்க வைத்துவிட்டாயே.....!

நீயும் மானிடப் பிறவி தானே
நட்பு பாசத்தை அறிந்தவள் தானே
ஏனடி என் எண்ணங்களில்
தீயை வைக்கின்றாய்? அதை விட
துளிவிஷம் கொடடி
உன் கையால் நட்பின்
கருணையால் கண்டேன்
மரணத்தை என்று
கவி படித்து கண் மூடுவேன்..........!

நீ மகா நடிகை தான்
எடுத்த எந்த காரியத்திலும்
நீ தோற்காதவள் தான்
நண்பியே! ஏனடி – என்
வாழ்க்கையை நாடகமாக்கி
என் நிகழ்காலத்தை
நடை பிணமாக்கினாய் – உன்
நினைவுகள் வலைகளாக
சுருக்கிட்டு இழுக்கிறதே............!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது நான் சிந்தித்துப் பார்க்கின்றேன்
தோல்வியின் முதல்முகவரியே
நான் தான்! என்
எண்ணங்கள் உள்ள மட்டும்
நான் என்றும் முகவரி தான்
முகம் மறந்தாலும் முகவரிகள்
மறக்கப்படுவதில்லையே............!

## போராடு

கல்வியும் மூவெழுத்து
சாதனையும் அம்மூவெழுத்தே
மூன்றெழுத்தில் மூச்சிருக்கும்
மூச்சுள்ள வரை போராடு – நண்பா
நீ போராடு

வாழ்வும் மூவெழுத்து
வேதனையும் மூவெழுத்து
முயற்சியெனும் நாலெழுத்தால்
போராடி வெற்றி பெறு – நண்பா
போராடி வெற்றி பெறு

போதனைகள் பலவற்றை
பாரினிலே பெற்றிடலாம்
தடைக்கல்லை படிக்கல்லாக்க
போதனையை துணையாக்கு – நண்பா
சாதனையை உனதாக்கு!

மேற்கில் மறையும் சூரியன் – மீண்டும்
கிழக்கில் உதயமாகவில்லையா?
ஒரு நாளில் வாடிப்போகும்
பூ கூட மீண்டும் சிரிக்கவில்லையா?
நண்பா! போராடு தினம் நீ போராடு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையை துளைத்து பயணிக்கும்
இரயிலைப்போல – உன் மனதை
துளைத்து நல் எண்ணங்களை
விதைத்திடு – நண்பா
இன்றே விதைத்திடு

காற்றடித்தால் கலைத்து விடும்
மேகங்களல்ல வாழ்க்கை
அது போல எதிலும்
தோல்வியென்று எண்ணாதே
உன்னில் நம்பிக்கை வை
நீ உயர்வாய்!
நாளை வசந்தம்
உன் சொந்தம்

## அன்பு

நீ!
என்னை அன்பு செய்த
போது வராத கண்ணீர்
நீ
இன்று உதிர்த்த
வார்த்தைககளால்
வழிந்தோடுகின்றது
அது ஏன்?
கண்ணீருக்கு
அன்பு மீது
இவ்வளவு
பற்றுதலா....?
உனக்கேன்
என்
மீது
பற்றுதல்
குறைந்தது......?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நாட்கள்

இன்று
நான்
சிறகொடிந்த பறவை!

நான்
மெழுகாய் உருகி
திரியாய் கருகி
காத்திருக்கின்றேன்
நீ வரும்
வழி பார்த்து........!

பனியாய்!
உறைந்த
பாறையாய் – என்
உணர்வுகளும்
கல்லாய் மாறி
கவி வரையும்
என் ஆசைகளும்
மரமாய் வேரூன்றி
மௌனிக்கும் – என்
கற்பனைகளும்
காத்திருக்கின்றன
நீ – வரும்
வழி பார்த்து ..............!



எனக்கும்
இதயம் உண்டு
துடிக்கும்
எனக்கும்
இருவிழிகள் உண்டு
கரையும் இடையிடையே
கண்ணீர்ப் பூக்களை வரையும்
நானும்!
ஓர்
மனிதப் பிறவியே!

உன் பிரிவு
எனக்கும் தான்
என் பிரிவு
உனக்கும் தான்
இருந்தும்
நீ
செய்வது புரியவில்லை

தொடர்ந்தும்
நான்
கல்லாய்.........
பாறையாய்
மரமாய்
பிணமாய்
உருமாறவா?
இல்லை
உன்
நினைவோடு
நடமாடவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொபைல் போன்

மரம் ஓய்வெடுக்க
நினைத்தாலும்
காற்று விடுவதில்லை
என் மனம் ஓய்வெடுக்க
நினைத்தாலும்
உன் நினைவுகள்
விடுவதில்லை......!



## உண்மை நட்பு

புரிந்த உள்ளங்கள்
பிரிய நினைப்பதில்லை
உறவெல்லாம்
உறவல்ல
பிரிவெல்லாம்
பிரிவல்ல
சிறு பிரிவெனில்
உயிர் போயின்
உறவென்ன
உறவா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவைத்தேடி

விடியலைத்தேடி
அலையும்
விடிவெள்ளியாய்
உன் உறவைத்தேடி
அலைகின்றேன்
நான்!



சொந்தங்கள்
நூறு இருந்த போதும்
சுகந்தங்கள் இல்லை
என் வீட்டிலே
நானிருப்பதோ
சுடுகாட்டிலே

எனக்கான
உறவாக
உன்னையே
நினைக்கின்றபோது
உன்னைமறந்து
உயிர்வாழ்வதேது
உன் அன்பால்
பண்பான என்னை
உன் பிரிவால்
பாவியாக்காதே

இந்நொடி கூட
உன்னை
வஞ்சிக்க
மனம் இல்லை
என்னையே விஞ்சிடும்
உன் நினைவுகள்
என்றுமே

நீயே
என்
கலர் கனவுகள்

உறவாக
நீ
வருவாயா?
உயிராக
நான்
பரிணமிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கண்ணாடி

என்னை பார்க்க
மறந்தாலும்
உன்னை பார்க்க
மறக்கவும்
நினைக்க மாட்டேன்



நீ
என் கனவல்ல
கலைந்து போக
என் நினைவு
நாளுமே
என்னுடனே
கலந்திருப்பாய்.......

## கற்பனை




நீ
எந்தன்
கவியில்
வாழுகின்ற
கரு.......
நான்
நின்னையே
நினைத்திருக்கும்
உரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீ வேண்டும் தெய்வமே

மலரும் மலர்கள்
தாம் மண்ணில்
மடிவதை எண்ணி
அழுவதில்லை



காலம் உள்ள
காலம் வரை
நீ! என்மனதோடு
நாளும் என்
நினைவோடு வேண்டும்

வளரும் உறவுகள்
பிரிவுதனை எண்ணி
மலர மறுப்பதில்லை
இதுவே யாதார்த்தம்
நீ மட்டும்
நிலையாக வேண்டும்

உன் நிழலில்
இளைப்பாற
காத்திருக்கும்
பறவை – நான்
உன்னில்
இடம் தருவாயா
நிரந்தரமாக..........!

## மழைக்காலம்

கடுங் கோடையே
இன்னும்
ஏன்
பழி வாங்குகிறாய்........,?
நான்
செய்த பாவம் என்ன....................?

உன்னால்
உயிரானேன்
மண்ணில் மரமானேன்
அன்று!
உன்னால் ஜடமானேன்
நடைப்பிணமானேன்
இன்று

நீயின்றி
தனியாக
நாட்களை என்ன
நாழிகைகளைக் கூட
நகர்த்த முடியவில்லை

ஓடி வந்து
உயிர் தந்தாய்
வாடி நின்று
கண்ணீர் வடிக்க
தேடி வந்து
துணை வாராது
தள்ளி நின்று
என்னை கிள்ளிப் பாரக்க
மனம் தாங்கவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுதலும் வீழ்ச்சியும்
கொண்ட – உன்
வருகையை நினைத்து
என் ஆவி மண்ணுக்குள்
மறையவே!
அடம் பிடிக்கிறது

சீக்கிரம் வந்து
என்ன சேர்ந்து விடு
தனிமைத் தீயில்
இனியும் தவிக்க
முடியாது!
இல்லையேல்
விட்டு விடு
வரவை அல்ல
உயிரை
என் உயிரை

## ஏமாற்றம்


ரோஜாவை கிள்ளப்போய்
கையில்
முள் குத்தியது போல்
என் நெஞ்சில்
குத்தி பதித்த உன் .......
நட்பை
நான் என்னென்று கூற
உண்மையாய்
நான்
உயிர்வாழ
உன்
நட்பே மருந்தாக

ஆயுளுக்கும்
உன் நட்பு
மனங்கவரும்
ரோஜாவாய் மணம்
பரப்பி – என்

உயிர் பறிக்கவே
நான்
தினந்தினம்
கனா காண்கிறேன்.

நீ! ரோஜாவை
வாசம் தந்து
என் மனதை
நேசிக்காவிட்டாலும்
முள்ளாய்!
என் மனதை அடிக்கடி
குத்திப்பார்க்காதே!

தோல்விகளை
காயங்களை
ஏமாற்றங்களை
இனியும் தாங்க
என் மனதுக்கு
முடியாதே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசை

ஆசைகளை
வளர்த்துக்கொண்டால்
அவஸ்தைகள் தானே மிஞ்சும்

கற்பனைகளை வளர்த்துக் கொண்டால்
கனவுகள் தானே எஞ்சும்

எதிர்பார்ப்புக்களை வளர்த்துக் கொண்டால்
ஏமாற்றங்கள் தானே தஞ்சம்

உன் உறவு எதுவானாலும்
பிரிவு அது மட்டும்
வேண்டாம்!

உன்னை இழந்து
உயிர் வாழ்வது
கடினம்........... கடினம் .............!

## வறுமை

கொண்டு வா
ஒரு தீக்குச்சி
உன்னால் – என்
மனதில் உருவான
உணர்வுகளை
தீக்கரையாக்க
நொடிக்கொரு தடவை
தீயிலே எரிவதை விட
ஒரேயடியாய்
தீக்குளிப்பது
நலம் தானே!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவு

தொண்டையில்
சிக்கி
வெளிவர தவிக்கும்
இன்ப வலி
அது தான்
உன் நினைவு



## கடிதம்

கனவுகளும்
கற்பனைகளும்
புதைந்துக் கிடக்கும்
புதை குழி
அதுவே
கடிதம்



## காதல்

இருமனம்
ஒருகணம்
சிந்திக்க
தவறியதால்
ஏற்பட்ட
விபத்து
காதல்

## எத்தனை முகங்கள்.....?

வண்ணங்கள் ஏழு
அது வானவில்
சந்தங்கள் ஏழு
அது ஏழுஸ்வரங்கள்
எண்ணங்கள் மட்டும்
ஏழு ........ எழுநூறு .........., ஏழாயிரமாக
அது ஏன்.........?



உள் ஒன்று வைத்து
வெளி ஒன்று பேசும்
பாசாங்கான மனித யுகம்
கொஞ்சம் சிரித்தால்
சிதை மூட்டிடும் கவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமைக்கு ஓடு போல
பூனைக்கு நகம் போல
யானைக்கு தும்பிக்கை போல
உனக்குள் நம்பிக்கை வை
நாளை உன்னையே
உனக்கு அறிமுகப்படுத்தும்

நீ! உன்னை கண்டறியாத
வரை நூலறுந்த பட்டம்
இதுவே ஊரறிந்த சொற்பம்

நேற்று அது முடிந்த கதை
இன்று அது கட்டாயம்
நாளை அது நிச்சயமற்றது
என்றும் விழித்திரு
இதுவே முக்கியம்

சிரித்தாலும் உண்மையாய்
அழுதாலும் உருக்கமாய்
பேசினாலும் இதமாய்
வாழ்ந்தாலும் நேர்மையாய்
வாழ நீ பழகு!

தூங்குபவனை எழுப்புவது இலகு
தூங்கவது போல் நடிப்பவனை
எழுப்புவது மிகக் கடினம்
அதுப்போலவே!
புரியாத உலகில்
புரியாத மனிதர்கள்
விடியாத மனத்திரைக்குள்
முகாரி இசைத்தபடியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்துக் கொண்டே
அழுவதை விட
அழுதபின் சிரிப்பது நன்று
இதயம் அப்போது தான்
முழுதாய் சுவாசிக்க
முடியும் உதயத்தை

மனத்திரைக்குள் மறைந்திருக்கும்
மனிதப் பண்புகளை
மீட்டிப்பார்
மாண்டுவிடும் – உன்னுள்
படிந்திருக்கும் மனக்கலக்கங்கள்
இன்று!
நாளை உதிக்கும்
முகங்கள் புதிய முகங்கள் ..........!

## அன்னையே உன்னை ஆராதிக்கின்றேன்

ஐயிரண்டு மாதம்
என்னை கருவில்
சுமந்து உருவாக்கியவளே
உன் மெய்! மெய் தான்
என் மெய்! பொய் தான்

நீ! பட்ட துன்பங்கள்
நான் கண்ட இன்பங்கள்
நீ மட்டும் அன்று
என்னை சுமையாக
கருதியிருந்தால் ஒரு நொடி
கருவிலே கருகியிருப்பேன்
நான் மறுநொடி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவான நாள் முதல்
கல்லாக்கினாய் உன்னை
கவியாக்கினாய் என்னை
உணர்வுகளை முடமாக்கி
சிறகுகளை விரித்துவிட்டாய்
என் கனவுகளை வளர்த்து விட்டாய்

நான் கல்விக்கரையைக் காண
வேண்டியே – நீ
கண்ணீர்க் கடலில்
நீந்தியே தீக்குளித்தாய்
நாளுமே நீ பெற்ற
துன்பங்கள் என்றுமே
என்னில் மறையாத
விம்பங்கள் ........

தவறியும் என் பிஞ்சு
மனம் பதறாது!
செதுக்கினாய் என்னை
உருக்கினாய் உன்னை!

நான் புசித்திருக்க – நீ
பசித்திருந்தாய் பலவேளை
நான் புன்னகைக்க – நீ
உன் நகை தனை
பகையாக்கினாய் இன்று

நீ! சிந்திய கண்ணீர்த்துளிகள்
ஒவ்வொன்றுமே!
என் இரத்தத் துளிகளுடன்
சல்லாபித்த வண்ணமே இன்றும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறையில் தொடங்கிய
நம் உறவு
கல்லறை தான் போகுமட்டும்
எஞ்சும்! இவ் உலகையே
விஞ்சும்!
என்றும் என் உயிர்
உன்னில் தஞ்சம்!

இலட்சியம் தன்னை
உயர்ச்சியாய் கொண்டு
வாழச் செய்தாயே என்னை
மண்ணில் மனிதப் பிறவியாய்
உன் சேவை தனை
கூற இல்லை வேறு வார்த்தை
மனிதம் நலிந்த – இவ்
உலகில் மனிதம் துளியாவது
புதைந்திருப்பது அன்னையே
உன் உருவில்!

உன் உறவே
எனக்கோர் உவகை
உன்னால் நான் கண்ட
வசந்தங்கள் என்றுமே
மறையாத சந்தங்கள்

உன் அன்புக்கு முன்
நான் அற்ப மண்
உன்னால் உருப்பெற்ற
என் உயிர்
என்றுமே உன்னை
ஆராதிக்குமே!
உயிர் உள்ளவரை
ஆராதிக்குமே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி உனக்கு

கருவறையில் ஜனித்த
நாள் முதல்
இன்று வரை – என்
உடன் பிறவா!
உறவாய் நடைபோடும்
உன்னை எனக்கு
மிகவும் பிடிக்கும்

என் சுகதுக்கங்களில்
என்மனவேதனைகளில்
முண்டியடித்துக் கொண்டு
ஓடி வரும் – என்
உயிர்த்தோழியே
உன்னை இழந்து
நான் அடைந்தது பல
உன்னை அடைந்து
நான் இழந்தது சில



சுகமான வலிகள்
சுமையான கணங்கள்
தூளாக நொடிகள்
மனம் வேராக
நாளுமே உருமாற
திராவகமாக வந்த
குளிர்நிலவே! உன்னை
பற்றி கூற மொழிகளில்லை

நிலையற்ற இவ்வுலகில்
நிரந்தரமற்ற உறவுகளிடையே
நிதர்சனமாக – நீ
மட்டுமே துணை எந்நாளுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்வருகை
என்னில் உவகை
இன்பமோ துன்பமோ
உறவோ பிரிவோ
எதுவானாலும் – நீ
என் கண் முன்னே
நிழலாய் அல்ல
நிஜமாய் வருவாயே

என் அகவொளி தாங்கும்
மனவலிகளை
பனித்துளியாக்கும் – என்
கண்ணீர்த்துளியே
உனக்கு என்றுமே
நான் நன்றி உள்ளவளே
நீயே என் நிரந்தர தோழி
நன்றி உனக்கு ..........!

## நிம்மதியே நீ எங்கே?

என் கண்ணீர்துளிகளிடம்
கேட்டுப்பார்
என்னைப் பற்றி
அவைகள் சொல்லும்
உன் பிரிவால்
தினம் நான் படும்
அவஸ்தைப்பற்றி



உன் பார்வைக்கு
நான் தகுதியற்றவளா?
நீயோ பதில் தராமைக்கு
இன்று நான்
தகுதியற்றவள் தான்
எதிர்காலம் என்னை
தகுதியுள்ளவளாக மாற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை பற்றி யோசித்ததை விட
உன்னைப் பற்றி
யோசிப்பதே அதிகம்
காரணத்தை தேடிப்பார்த்தேன்
என்றும் ஆறுதலாக தெரிகிறாய்

தினம் தினம் கன்னங்களில்
கண்ணீர் யாத்திரைகள்
எத்தனை எத்தனை
அத்தனையும் ஆதாரமே
உன்மேல் நான்
கொண்ட அன்பிற்கு

உனக்கோ – என்
புலம்பல்கள் புரியாத
புதிராகவும் புரிந்த
நகைச்சுவையாகவும்
சிலவேளை இருக்கலாம்!
ஆனால் புரிந்து கொள்வாய்
நீயும் ஒரு நாள்
புலம்பும் போது

மனித வாழ்க்கையில்
காண முடியாததும்
காண முயல்வதும்
ஒன்றே ஒன்று தான்
அது தான் நிம்மதி

வாழ்வின் அழகான
பெயர் தான் நிம்மதி
என்பர்! என்னை
பொறுத்த வரையில்
நான் உன்னை
விரும்புவது நிம்மதிக்காக
அல்ல! உன் மேல்
கொண்ட அன்பால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ தடவை
என் மனதிடம் கேட்டேன்
உன்னை வரச்சொல்லி
ஒரு தடவைக் கூட
நீ! முகம் காட்டவில்லை
அது ஏனோ.....?

நீ! என்னை
சந்திக்க மறந்தாலும்
நான் உன்னை பற்றி
சிந்திக்க மறக்கவும்
மாட்டேன்!

## மனிதா!



மனிதா!
நீ உன் எண்ணங்களை
உயர்வாக வை
அப்பொழுதே வண்ணங்களாக
மாறமுடியும்
மண்ணில் அழியாச் சின்னமாக
உருமாற முடியும்

உன் கனவு
நல்லதாக இருந்தால்
உன் நினைவும்
நல்லதாகவே இருக்கும்

எதை நீ! நினைக்கின்றாயோ
அதுவாகவே மாறிவிடுவாய்
இவ் உலகையே மாற்றிவிடுவாய்
உனக்குள் ஒழிந்திருக்கும்
உன் மெய்யான விம்பம்
அதை உணராத வரை
நீயே உனக்கு துன்பம்

இன்ப துன்பங்கள்
வெற்றி தோல்விகள்
உறவு பிரிவுகள்
கண்ணீர் காயங்கள்
எதிர்பார்ப்பு ஏமாற்றங்கள்
இவை மட்டுமல்ல வாழ்க்கை
இவை எல்லாம் வாழ்க்கை
பாடத்தின் ஓர்
அத்தியாயமே!

இவற்றுக்கு எல்லாம்
மீறிய ஓர் உந்து சக்தி
உண்டு அதுவே
உன்னில் புதைந்துள்ள
**முடியும் என்ற தன்னம்பிக்கை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கணம் நீ
உன் கண்களை மூடி
கனவுகள் காண்
அடைந்தவைகளை விட
அடையாதவைகளே
அழியா நினைவுகளாகின்றன
இன்னும் காலம் தாழ்த்தாது
இன்றே முடிவெடு

நீ அடையப்போவது
எதனை?
சாதிக்கப் பிறந்த – நீ
ஓர் சாதனையாளனே
வேதனைகளைக் கண்டு
வேடிக்கை பாராது வரும்
தடைகளை உடைத்தெறி
உனக்கான ஓர்
உலகம் வெகு
விரைவில் உதயம்

## காதல் வாழ்க்கை

வாழ்க்கை
வாழ்வதற்கே
காதல்
வாழ வைப்பதற்கே

காதலும்
வாழக்கையும்
ஒன்றல்ல



இருந்தும் காதலின்றி
எதுவும் இல்லை
இவ் உலகிலே

எப்படியும்
வாழ்பவன்
மனிதனல்ல

இப்படித்தான்
வாழ வேண்டும்
என்று வாழ்பவனே
மனிதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலை காயப்படுத்துவோர்
ஒருபுறம்
இவ் உலகில்

வாழ்க்கையை தொலைத்து
கண்ணீர் சிந்தி
தேடுவோர் மறுபுறம்
இவ் உலகில்

மனிதா – நீ
காதலை விற்று
வாழ்கையை
வாங்க முடியாது

வாழ்க்கையை விற்று
காதலை வாங்க
முடியாது

மூச்சு என்ற
மூன்றெழுத்து உள்ள
வரையே மண்ணில்
உன் ஆட்சி
நாளுமே

காற்றடைத்த பையடா
இவ் உலக இன்பங்கள்

இருந்தும் – நீ
ஏன் வாழ்கின்ற
இந் நாட்களை
வீணடிக்கிறாய்........?

காதல் காவியங்களையும்
எழுதி உள்ளது
சில காயங்களையும்
பதித்துள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு உன்
கையிலே
நீ! நல்ல மனிதனாக
முதலில் இரு
பிறகு நல்ல
காதலனாய்
காதலியாய்
மாறு

நீயே
உணர்வாய்
வாழ்வை
சுவைப்பாய்

ஆஹா........ ஆஹா
காதலின் வேர்கள்
வாழ்க்கையின்
விருட்சங்கள்
என்று

## திருமணச் சந்தையிலே............

பெண்ணானவள்
திருமணச் சந்தையிலே
பலிகடாவாய்
பகிரங்கமாகவே
பறைசாற்றப்படுகின்றாள்



கெட்டி, மேளம் கொட்ட
மலர் மாலைகள் தொங்க
உறவினர் சூழ
மனம் தனை ஈடாக்கி
மணமகளாக உருமாறியே!

கல்லானாலும் கணவன்
அந்நிலை மாறி
கணவனே கல்லாக
பாறாங் கல்லாக
அவள் தோல்களிலே
மாங்கல்யம் என்ற
மூர்க்கனாங் கயிறு
மார்பினிலே கழுத்தைச்
சுற்றிய நாகமாக
நரக வாழ்க்கையின்
திறவு கோளாக.......!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுச்சேலை நடுவே
மனவேதனைகளை
மறைத்து புன்னகை தீவில்
இன்ப விதைகளை புதைத்து
தன் தாயின் திருப்திக்காக
கண்ணீரைக் கூட
கண்களுக்குள்ளே குடி புகுத்தி
செய்வதறியாத அபலை
பாவம் அவள்

இன, சனம் மூக்கு
பிடிக்க உண்டு
அடுத்தவேளை
அதனை பார்க்க நகரும்

கடைசிவரை
கடவுளே துணை
என்றெண்ணி
வாழ்க்கை பாடத்தின்
மறுப்பக்கம் புரட்ட
மறுப்பிறவி எடுக்கும்
நேரம் இது

பிறந்தவீடா
புகுந்தவீடா
இனி என் உரிமை
என்று புரியாத
புதிருக்குள் பிரவாகனமாகும்
இவள் என்றுமே
புரியாத புதிர் மட்டுமல்ல
புரியாத மொழியும் தான்

முடிந்தால் இவளை
புரிய மறுத்தாலும்
புண்படுத்த நினைக்காதீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசைகளும் அவஸ்தைகளும்

கருவறை முதல்
கருவான ஆசைகள்
மண்ணறை தான்
காணும் மட்டும்
நடை போடுமே

கனவுகளை வளர்த்துக்
கொண்டு கவி பாடுவதை விட
நினைவுகளைச் சுமந்துகொண்டு
நிம்மதி காணலாமே
நடக்கும் என்று
நினைப்பதும் மனது
நடக்காது என்று
நினைப்பதும் மனது



மனிதா ! நீ
நடப்பவைகளை
மட்டுமே நினைக்கப் பழகு

உன் தகுதி
உனக்கு புரியும்
உன் உறுதி
அதனை வெல்லும்

அளவோடு வளர்த்துக் கொள்
உன் ஆசைகளை
ஆசைகளுக்கு போடாதே
வெளி வேடம்
ஆக்கிவிடுமே பாலைவனம்
உன் வாழ்வினையே
அழித்து விடுமே என்றும்

எல்லை மீறிய ஆசை
தொல்லைகளை மட்டுமே
துணையாக்கி விடும்
உன்னையே பிணமாக்கி விடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைக்கு – நீ
அடிமையாகாத வரை
அவஸ்தைகள் உன்னை
அசைக்க என்ன
அண்டவும் முடியாது

நடக்காத பலதையும்
நடக்கும் என்று
ஆசைகளை வளர்க்காதே
அது! நீயே உன்னை
ஏமாற்றிக் கொள்வதற்கு
உத்தரவாதம்

ஆசைகள் நிராசைகளாக
ஆண்டவன் அன்னியவனாய்
மாற! உறவுகள்
ஊரவராக உயிரை
சிதைத்து உடலை பகைத்து

இனியும் நீ ஜடமாய்
வாழ! புதிதாய் ஜனிக்கப்
போகிறாயா? இல்லை
அவஸ்தைகளை அனுபவிக்க
போகின்றாயா?
முடிவு உன் கையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ ......... யார்?

நட்பு என்ற மூவெழுத்தில்
கற்பை தவிர வேறொன்றுமில்லை
நதியின் வளைவுகளை
அறிய முடியும்
விதியின் வளைவுகளை
அறிய முடியாது
அதுப்போலவே நட்பும்



நிரந்தரமற்ற இவ்
உலகிலே இன்று
நட்பு கூட நியாயமற்ற
ஒன்றாக உருமாற
வேதனைகள் தரும்
வேடிக்கைகளை கூற
வழியில்லை! எனக்கொரு
துணையும் இல்லை

மனித மாமிசத்திற்குள்
உயிரை மறைத்திருப்பது
வியப்பல்ல – மனித
மனங்களுள்ளே விஷப்
பூச்சிகளை மறைத்து
வைத்திருப்பதே புதுமை

பச்சை சிரிப்புக்களும்
கொச்சை பேச்சுக்களும்
இன்றைய நட்பாக
வெளி வேடங்கள்
காட்டும் பரிணாம கீதங்கள்
வலம் வர பிடிக்கவில்லை
இவ்உலகை – அதில்
வாழும் மனித மனங்களை
அல்ல ஜந்துக்களை!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமுடியணிந்த
நட்புக்குள் – நீ
தேடுவது எதனை
உண்மையான
உள்ளத்தையா இல்லை
உண்மையான உன்னையா?

இறுதிவரை உறுதியற்ற
இவ் உறவுக்காய்
நீ! உன்னையே
ஏமாற்றிக் கொள்ளாதே
முடிந்தால் உனக்கு
நீயே! நல்நண்பனாக இரு

## நிரந்தர முகவரி

ப்ரியத்துக்குரியவனே
நீ
இப்போதும்
இருப்பது
என் இதயத்துக்குள்
எப்படியுன்
இதயத்தில் இன்னொருத்தி
இடம் பிடித்தாள்?



எனக்குள்ளே இருப்பவனே
உனக்குள்ளும் ஒருத்தியா?

என்னை – நீ
இதயமில்லாதவள் என்று
ஏசியதும்
உண்மை தான்
அப்போதே என் இதயத்தை
உனக்குள்
தொலைத்துவிட்டேன்!

பறித்தெடுத்த உனக்கே
அதை பாதுகாக்க
தெரியாத போது
பறிகொடுத்த எனக்கு
வேறு வழி புரியவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் விலாசமாய்
நீ இருந்திருந்தால்
தொலைந்ததை
தெரியப்படுத்தியிருப்பேன்
கனவிலாவது
ஆனால் என் இதயமே
உன் விலாசமாய்
இன்றும் இருக்கிறது

இது இரவும் பகலும்
உன் பெயர் சொல்லியே
விழித்திருக்கிறது.

யார் முகவரி
உன்இதயத்தில்
எழுதப்பட்டிருந்தாலும்
உன்முகவரி
என்இதயமே!
என் இதயம்தான்
உன் முகவரி
நான் இறந்தாலும்
மாறாது அதில்
ஒரு வரி

## பொறுமனமே

மலைவாசியாய்
விலைவாசிகள் உயர
வாழ்க்கை படகு திக்கு
திசையறியாது! தடம் மாற
ஓர் இடம் தேட
என்ன செய்வோம் நாம்

வாழ்கின்ற சொற்ப நாட்கள்
மண்ணில் வடிக்கின்ற
கண்ணீர் கடல்கள்
செந்நீர் உடனே கலந்தாற்
போல! மனம் துடியாய் துடிக்க
யாரறிவார் எம்நிலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலில்லா மார்பினிலே
குழந்தை வாய் வைத்து
உறிஞ்ச அங்கே
சுரந்தது பாலல்ல
தாயின் இரத்தத்துளிகள்

கால் வயிறும் அரை வயிறும்
உண்டு வாழும் இந்நிலை
நீங்கி – மனம்
இலயித்து வாழும்
அந்நாள் இனி
என்று வரும்?

மண்ணெண்ணெய் விலை
மனிதனையே எரிக்க
மரக்கறி விலையோ
மரகதப் பச்சையாய் மாற
இது கூட பரவாயில்லை

நெல்லரிசி சோறு
சிம்ம சொற்பனமாக மாறி
தன் வழியில் நடைபோட
வாழும் ஏழைஇனம்
நாம் இதை எங்கே
போய்க் கூற?

என்று வரும்
நியாய விலை
வென்று வருவோம்
ஒன்று திரண்டு
கண்டு மகிழ்வோம்
வாழ்வை விற்று
"வாழ்" உரிமை
வேண்டியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிப்பவை நிழல்களல்ல

தோழா! கருவறையில்
இருந்து உலகு வரை
குதித்த உனக்கு கல்வியை
அடைய தயக்கம் ஏன்?

நூறு யானைகளை விட
உன்சக்தி வலிமையானதே
உன்னில் அதை தேடிப்பார்
உன்னை உலகறியும்

தோழனே! இனிமையான
கல்வியை இழப்பதும்
இளமை பொழுதில்
அதை மறுப்பதும் மடமை

நீ! தன்னம்பிக்கைக்கு பாலூட்டு
உன்னில் வேர் வளரும்
முயற்சித்துளிகள் சிந்தப்படும்
போது தான் கல்வி வேர்கள்
இதயத்தில் ஆழமாக பதியும்

இன்றே மாற்றிடு
உன் மனதை
நன்றே விதைத்திடு
உன்கனவை

உருக்கொண்டதை
உருக்குலையாது
உருவம் கொடு காற்றை
விட மனப்பலந்தான்
உன் எரிபொருளென்று
உணர்கின்றாயா இன்று

நீ நீயாக இல்லாத
நிலையிது – நீ
நிஜத்தை தொலைத்து விட்டு
நிழலாகிறாய்
சாதிப்பவை நிழல்களல்ல
நிஜம்

தன்னை நம்பாதவன்
சிகரம் தொட்டதில்லை
ஒருகணம் நீயும்
மாறித்தான் பாரேன்
நீயும் சாதனையாளனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிழல்

எனக்கும்
தெரியாமல்
என்னைத்
தொடரும்
C.I.D

## கல்வி



முதுமையில்
இளமையாக
வாழ
இளமையின்
தேடல்
கல்வி

## நட்பு

மூன்று எழுத்துக்களால்
முடிக்கப்பட்ட
ஒற்றைச் சொல்
முடிச்சு அவிழாத
வரை! நட்பு
நம்பகத்தன்மையானது

## கண்ணீர



பாலை நிலத்தில்
பனித்துளியாய்
பரிணமிக்கும்
பருவ நிலா
கண்ணீர்

## பிரிவு

உன் மனமும்
என் மனமும்
நினையாத
இடைவேளை
பிரிவு

## வாழ்க்கை

நிரந்தரமில்லா
முகவரி
வாழ்க்கை

## இதயம்

வேதனைகளும்
சாதனைகளும்
துயிலும்
கல்லறை

## முதுமை

அனுபவம்தந்த
வெகுமதியின்
வெளிப்பாடு
முதுமை

## மனிதம்

மனிதருள்
மறைந்திருக்கும்
புதையல்
மனிதம்

## மரணம்

இது வாழ்வின்
முடிவல்ல!
இனி தான்
ஆரம்பம் அதுவே
நம் மரணம்

## திருமணம்

வர தட்சணைகளின்
தேடல்
அதுவே
திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயநலம்

வெயில் அடிப்பது
பொதுநலம்
அதில் நான்மட்டும்
நிழலில் ஒதுங்குவது
சுயநலம்


## குடை

நீ
குடை வாங்கி கொடுத்தாய்
அன்று அது
மழைக்கு பிடிக்கவே
என்று நினைத்தேன்

இன்று தான்
புரிகின்றது
என்கண்ணீர் மழைக்கு
பிடிக்கவே என்று

## நீயா......... நட்புத்தீயா!

பாசமாய் பழகி
அன்பாய் பேசி
ஆறுதலாய் நெருங்கி
இருந்த நீயா?
இன்று தீயாய்
என்னை சுட்டெரிப்பது?



உன் பாசத்தால்
என்னை சுட்டெரித்திருந்தால்
அது
சுகமாய் இருந்திருக்கும்

நீயோ வாய் வார்த்தைகளால்
என்னை சுட்டெரிக்க
தாங்க முடியவில்லை
என்னால்!

இது நீயா?
இல்லை
நட்புத் தீயா!?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைக்காட்சி

உலகத்தை
காட்டும்
கண்ணாடி

## நகை

மனிதனை
மதிப்பிடும்
முதற் பொருள்

## வறுமை

மனிதனின்
ஆயுளை
மெது மெதுவாய்
குறைக்கும்
விஷம்

## ஒப்பனை

பொய்மையை
மெய்மையாக
காட்டும்
முயற்சி

## தனிமை

நிம்மதியை
தேடிய
பயணம்

## புடைவை

கலாசாரத்தின்
எஞ்சிய
எச்சம்

## உயிர்

உத்தரவாதம்
இல்லாத
உறவு

## கண்ணீர் பறவை

என் மனதை இவ்வுலகில்
யாருமே அறியவில்லை
படைத்தவன் நீயோ
மௌனமாய் இருக்க
பாரினில் நானோ
கண்ணீருடன் தவிக்கின்றேன்......!

நாளுக்கு நாள் என்
உடலும் உயிரும்
வாடியேபோக – என்
நிலைமை கதறியமுகின்றேன்
எனக்கான ஓர்
நிம்மதியினை நிரந்தரமாய்
தினந் தேடிய பயணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்காக வெகுதூரம்
பயணித்த நான் – என்
மரணித்த உணர்வுகளுடன்
மன்றாடுகின்றேன் விடுதலையை
நிரந்தரமாக நாடியே
இவ் உலகினின்று

ஆசையுடன் பேச தொலைபேசி
அதனை கையிலெடுத்தேன்
இடி இடித்தாற் போல
மறுமுனையில் வார்த்தை
அம்புகள் வெளியாக
என் இதயமே வெடித்தது
இவ் உலகினின்று – நிரந்தர
விடுதலையை உடனே வேண்டி

நிலையற்ற இவ் உலகிலே
நிரந்தரமற்ற உறவுகளிடையே
நிதர்சனமான உறவை
நித்தியமான அன்பை
நான் எதிர்பார்ப்பது
பிழைதான் புரிந்துகொண்டேன்
என்னை அல்ல நன்றாய்
இவ் உலகை

## ஏன்?

வானம் பொழிந்தால்
பெய்யும் மழையை
அனைவரும் கூடி
கண்டு மகிழ்வர்
ஆனால் – என்
விழிகள் வழியே பொழியும்
நின் காதல் மழையை
இவ் உலகில்
ஒருவருமே காணவில்லையே
என்னைத் தவிர
அது ஏன்.....?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவார்த்தையின் வரவால்



பட்டுப்போன மரத்திற்கு
மேகம் சிந்திய மழைத்துளியாக
உன்ஒரு சில வார்த்தைகள்
என்உயிர்துளியாகின

உன்உற்சாகமான
பேச்சுக்கள் என்
உற்சாக பானங்களாக
உருமாறி அந்நொடிகளை
காதலிக்கின்றேன் உளமாறவே
இத்தனை நாட்களாய்
பசித்திருந்த என் இதயம்
இன்று தான் சிரிக்கின்றது
உன் வரவாலே

அழுதழுதே என் விழிகள்
உப்புக் குளங்களாக
மாறியவை இன்று
ஒருதுளி இன்பத்தை
அனுபவித்த உன்
வரவால்

இத்தனை துன்பத்திற்குள்ளும்
இன்பத்தினை நாடிய என்
உள்ளம் என்றுமே
உன் தஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவு

சூரிய உதயத்திற்கு
இருள் முடிவு
சந்திர உதயத்திற்கு
விடியல் முடிவு
மழைக்கு வெயில்
முடிவு
வெயிலுக்கு மழை
முடிவு
மனிதனுக்கு இறப்பு
முடிவு
உயர்வுக்கு வான்
முடிவு
சாதனைக்கு சரித்திரம்
முடிவு
கடலுக்கு கரை
முடிவு
காற்றுக்கு காற்று மண்டலம்
முடிவு
பூமிக்கு அழிவு
முடிவு
நமக்கு காலம் தான்
முடிவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகள்

"நூல் வெளியீடு என்பது வெறும் அச்சுப்பதிப்பல்ல, அது சிந்தனையின் கருவூலம்"

முகவரியற்ற என் கவிக்குழந்தைகளுக்கு "முகத்திரை" எனும பெயரிட்டு உணர்வுடன் அவை இன்று நடமாட, உங்கள் உள்ளங்களுடன் உறவாட, இந்நூல் மலர அனுமதியளித்து என்னை நெறிப்படுத்திய கலாசாலை முதல்வர் உயர் திரு.M.இக்னேசியஸ் அவர்களுக்கும், வழிகாட்டி, ஊக்கப்படுத்தி ஆலோசனைகளை வழங்கிய விரிவுரையாளர் திரு.K.ஹரிஹரசக்தி அவர்களுக்கும், மற்றும் ஏனைய விரிவுரையாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந்நூலுக்கான விமர்சன உரையை தந்துதவிய திரு.முருகேசு கௌரிகாந்தன் அவர்களுக்கும், இந்நூல் உருவாக்கத்திற்கு பெரும் உதவிகளை புரிந்த திரு.சுஜந்தன் ஆசிரியர் அவர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும் இந்நூலினை உரிய காலத்தில் அச்சிட்டு பிரசவித்த கஜானந்த பிறிண்டேர்ஸ் அச்சகத்தினருக்கும் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் எனது நன்றிகள்.

என் அகத்திரையில் பதிந்திருந்த சிந்தனைகள் இன்று முகத்திரையாக வலம் வர உதவிய அனைத்து ஆசிரிய மாணவர்களுக்கும், பெயர் குறிப்பிடாத இன்னும் உதவிகள் பல புரிந்த அனைத்துள்ளங்களிற்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன் உள மாற நன்றிகள்.

நூலாசிரியை<br>
A.பிரியா<br>
(பலாலி ஆசிரிய கலாசாலை<br>
ஆசிரிய மாணவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜானந்த் பிறிண்டேர்ஸ் - இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org